2005 மார்ச் 17]

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கிற நேரம். இந்தச் சூழ்நிலையிலே தமிழக அரசு கொள்கை முடிவாக இதுவரையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இந்தியன் ஆயில் நிறுவனத்திலேயிருந்து பெற்று வந்த டீசலுக்குப் பதிலாக..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுக்க வேண்டுமோ எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அதுதான் பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுக்க வேண்டுமோ எடுத்துக்கொள்கிறேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நேற்று நானும் கொடுத்திருக்கிறேன். நம்முடைய திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். காவிரி நடுவர் மன்றத்திலே தமிழக அரசு தண்ணீர் கோருவதிலே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை; கவன ஈர்ப்பாகத் தந்திருக்கிறீர்கள். என் ஆய்வில் இருக்கிறது.

4. கவன ஈர்ப்பு

கோயம்புத்தூர், காந்திபுரம் மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் வீட்டுவசதி வாரிய வீடுகளைச் செப்பனிடுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோயம்புத்தூர் நகரில் காந்திபுரம் வி.கே.கே. மேனன் சாலை மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி

[திரு. வி.கே. லட்சுமணன்] [2005 மார்ச் 17

வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளைச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கோயம்புத்தூர் 26-வது டிவிஷன் காந்திபுரம் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பில் மொத்தம் 84 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகள் 1968 ஆம் ஆண்டு கட்டப்பட்டவையாகும். அத்தியாவசிய பராமரிப்புப் பணிகளான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் பணிகள் கோவை வீட்டுவசதிப் பிரிவின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மேற்படி குடியிருப்புகள் கட்டப்பட்டு 35 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டபடியால் இக்குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. காந்திபுரம் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு சிறப்பு பழுதுபார்க்கும் பணிகளுக்காக கோவை வீட்டுவசதிப் பிரிவு செயற் பொறியாளரால் ரூ.23.67 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கோவை 29-வது டிவிஷன் வி.கே.கே. மேனன் சாலையில் சித்தாபுதூர் பகுதியில் உள்ள 214 குடியிருப்புகள் 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு கட்டப்பட்டவையாகும். கோவை 35-வது டிவிஷன் காமராஜபுரம் அருந்ததியர் காலனியில் 66 குடியிருப்புகள் உள்ளன. இந்த இரண்டு டிவிஷன்களிலும் உள்ள குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு முறையே ரூ.75.00 இலட்சம் மற்றும் ரூ.30 இலட்சம் வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது. காமராஜபுரம் காலனியில் உள்ள 66 வீடுகளுக்கு அவசர சிறப்பு பழுதுபார்க்கும் பணிகளுக்கு கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களின் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ. 3,99,350 கேட்கப்பட்டுள்ளது.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சிறிய திருத்தம். கோயம்புத்தூர் 26-வது டிவிஷன் காந்திபுரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 26-வது டிவிஷனில் காந்திபுரம் இல்லை. 26-வது டிவிஷன் D.F.O. Compound என்று அதைத்

2005 மார்ச் 17] [திரு. வி.கே. லட்சுமணன்]

திருத்திக் கொள்ள வேண்டும். அங்கே அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்பில் மொத்தம் 84 குடியிருப்புகள் உள்ளன. இதிலே வாழ்கின்ற மக்களுடைய வீடுகளும் பழுதடைந்து அபாயகரமான நிலையில் இருக்கின்றன. அந்த வீடுகள் கட்டி 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. நான் அண்மையில் சென்னையில் இருக்கிற மிகப் பழமையான கட்டடங்களை எல்லாம் போய்ப் பார்த்தேன். I.G. அலுவலகம், Admiralty Building, Memorial Hall, இதுபோன்ற கட்டடங்களைப் பார்த்தேன். அதில் Ripon Building கட்டி இன்றைக்கு 90 ஆண்டுகள் ஆகின்றன. Memorial Hall கட்டி 150 ஆண்டுகள் ஆகின்றன. Rajaji Hall கட்டி..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன், ஏதாவது ஒரு கேள்விதான் கேட்கலாம்.

திரு. வி.கே. லட்சுமணன்: ஆக, இந்த பழைய கட்டடங்கள் எல்லாம் இன்றைக்கு நல்ல நிலையில் இருக்கின்றபோது, வெறும் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளே ஆன கட்டடங்கள் எல்லாம் ஏன் இடிகின்றன? அந்த அளவுக்கு நம்முடைய பொறியாளர்கள் தரம் குறைந்துள்ளார்களா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேசமயத்தில் இந்த அரசினர் குடியிருப்புகளில், அந்த 2-வது மாடியில் இருக்கின்றவர்கள் அதைக் காலி செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால் அது இடிந்து விழுவதால் ஏற்படுகின்ற ஆபத்துக்கு நாங்கள் பொறுப்பல்ல என்று நோட்டீஸ் ஒட்டியிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் கட்டுகிற வீடுகளுக்கு அவர்களே ஏதோ இன்ஷூரன்ஸ் செய்ய வேண்டுமென்று சொல்வதுபோல் இருக்கிறது. நாங்கள் வாரியத்தை அணுகிக் கேட்டால் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். இந்த வீடுகள் எப்போது செப்பனிட்டு வாழ்வதற்கு உரியதாக ஆக்கப்படுமென்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை 35-வது டிவிஷன் காமராஜபுரத்தில் 66 குடியிருப்புகள் 1972-ல் கட்டப்பட்டன. அதுபோன்று 29-வது டிவிஷன் வி.கே.கே. மேனன் சாலையில் 214 குடியிருப்புகள் 1972-ல் கட்டப்பட்டன. அதுபோல 26-வது டிவிஷன் D.F.O. Compound division-ல் 84 அரசினர் குடியிருப்புகள் 1964-ல் கட்டப்பட்டன. இந்தக் குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய பராமரிப்புப் பணிகளான குடிநீர் விநியோகம், கழிவுநீர்

அகற்றுதல், குடிநீர் மோட்டார் மற்றும் பொது இடங்களில் உள்ள விளக்குகள் ஆகியவற்றுக்குண்டான மின் கட்டணம் கட்டுதல், பம்பு இயக்குநர், பெருக்குவோர், காவலர் ஆகியோரை பணி அமர்த்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளில் கைப்பிடிச்சுவர் மற்றும் சன்னல்-கூரைகள் பழுதடைந்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. அதன் அடிப்படையிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் பேரில் மராமத்துப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் மராமத்துப் பணிகள் தொடங்கப்படும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-15

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 35-வது டிவிஷனும், 29-வது டிவிஷனும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுதியாக வாழ்கின்ற பகுதிகள். அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற அந்தக் கட்டடங்களையாவது மிக விரைவாகச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 29,000 அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டப்பட்டு வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. அவற்றில் சுமார் 26,000 அரசு ஊழியர்கள் தற்சமயம் குடியிருந்து வருகின்றனர். இக்குடியிருப்புகள் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. இக்குடியிருப்புகள் பல இடங்களிலே பழுதடைந்துள்ளன என்பது அரசால் அறியப்பட்டு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி எல்லாக் குடியிருப்புகளுக்கும் சிறப்பு மராமத்துப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, அப்பணிகளும் இப்போது மிக வேகமாக நடந்து வருகின்றன. அப்பணிகள் முழுமை அடைந்தவுடன் மராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு பகுதிகளுக்கும் உடனடியாக மராமத்துப் பணிகள் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.